<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>MCOP. No.65/2021</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 21–ஆம் நாள் எ.சா.2 சாட்சி திரு.ராஜேஸ்குமார் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.ராஜேஸ்குமார் | தொழில் | : துணை மேலாளர் |
| த/பெ | : சுவாமிதாஸ் | கிராமம் | : ஈரோடு டவுன் |
| வயது | : | தாலுக்கா | : ஈரோடு |

<u>எ.சா.2 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் துணை மேலாளர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

TN 40 T 8842 வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் உண்மை நகல் எ.ம.சா.ஆ.5 ஆகவும், 17.10.2025ம் தேதியிட்ட ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் ஆன 1ம் எதிர்மைனுதாரருக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் எ.ம.சா.ஆ.6 ஆகவும், திருப்பட்ட கவர் அசல் எ.ம.சா.ஆ.7

ஆகவும் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

விபத்தை நான் நேரடியாகப்பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் மீது போலீசார் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 04.11.2020ம் தேதி எதிரி ஓட்டிய வாகனத்திற்கு பாலிசி நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் இழப்பீட்டை செலுத்திவிட்டு வாகனத்தின் உரிமையாளரிடம் வசூலித்துக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.